DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.34/2026**
Prosecution Witness P.W.2

Name:**திரு. முத்து காமாட்சி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

**நாள்: 22.06.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பெரியகுளம், தெற்கு புதுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சி கார்த்திகேயனை எனக்கு தெரியும், இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள முத்தையாவை எனக்கு தெரியும்., கடந்த 11.08.2025ம் தேதியன்று பாண்டியா என்பவர் இறந்துவிட்டார், அவரது இறப்பு தொடர்பாக சந்தேகம் இருப்பதாக முத்தையா என்பவர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். அன்றைய தினம் இரவு 10 மணியளவில் எங்கள் சங்கத்தில் போலிசாரிடம் யார் தகவல் சொன்னார்கள் என்பது தொடர்பாக ஒரு கூட்டம் போட்டார்கள்.

2. அப்போது கூட்டத்திலிருந்தவர்கள் யார் போலிசாருக்கு தகவல் சொன்னார்கள் என்று சங்கத்தலைவர் உள்ளிட்டோர் கேட்டபோது துளசிமணி, முத்தையாவைப் பார்த்து நீங்கள் தானே தகவல் சொன்னீர்கள் என்று கேட்டார், அதனால் துளசிமணிக்கும், முத்தையாவிற்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதால் இருவரையும் வெளியே அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு நாங்கள் நாற்காலிகளை எடுத்துவைத்து விட்டு சங்கத்தை பூட்டி விட்டு நான், கார்த்தி, தணிகைவேல், நந்தா ஆகியோர் வெளியே வந்தோம். வெளியே வந்து பார்த்தபோது சண்டை போட்டு கொண்டு கூட்டமாக இருந்தது. முத்தையா

பயத்தில் அருவாளை எடுத்துக் கொண்டு துளசிமணியை நோக்கி வந்தார், அதற்கு துளசிமணி பயந்து கொண்டு சந்திற்குள் ஓடினார்.

3. தங்கபாண்டி கத்தியால் துளசிமணியின் இடது பக்க கழுத்திலும், அதன் அருகேயுள்ள நெஞ்சிலும் இரண்டு குத்து குத்தினார். நாங்கள் சத்தம்போட்டவுடன் தங்கபாண்டி ஓடிவிட்டார். அதன்பிறகு நானும், அ.சா.1ம் அடிபட்ட துளசிமணியை எனது இருசக்கர வாகனத்தில் எடுத்துக் கொண்டு சென்றோம். அவரை மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்.

4. அதன்பிறகு நானும், கார்த்திக் பெரியகுளம் தென்கரை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். கார்த்திகேயன் புகார் கொடுத்தார், அதில் நானும் கையொப்பம் செய்தேன். என்முன் காட்டப்படுவது தான் அந்த கையொப்பம், அது அ.த.சா.ஆ.3. அதன்பிறகு எனது சட்டையிலும், உள்பனியனில் இரத்தக்கறை இருந்ததால் அதனையும் போலிசாரிடம் ஒப்படைத்தேன், அந்த சட்டை சா.பொ.4, உள்பனியன் சா.பொ.5. அதன்பிறகு ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னர் என்னை பெரியகுளம், நீதித்துறை நடுவர் முன்பு ஆஜராகி வாக்குமூலம் பதிவு செய்தார். எந்த தேதி என்று சரியாக நினைவில்லை. நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.4.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என்னுடைய மற்றொரு பெயர் வாழவந்தான் என்றால் சரிதான். துளசிமணி எனக்கு நண்பர். நானும், துளசிமணியும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. வேறு சமூகம். இறந்து போன பாண்டியா இறப்பு சம்பந்தமாக எதிரி முத்தையா போலிசாரிடம் தகவல் சொன்ன விபரம் எனக்கு நேரடியாக தெரியாதென்றால் சரியல்ல, எனக்கு தெரியும். நடந்ததாக சொல்லும் சம்பவத்தின் போது எனக்கும், என் உடன் இருந்த நபர்களுக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை. தெற்கு புதுத்தெருவில் நிறைய சந்துகள் உள்ளதென்றால் சரிதான். அங்கு பேவர் பிளாக் கல் பதித்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2. நான் துளசிமணியை அழைத்துச் சென்ற இருசக்கர வாகனத்தின் விபரத்தை காவலரிடம் எழுதிக் கொடுத்தேன். கார்த்திகேயன் கொடுத்த புகாரின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாதென்றால் சரியல்ல, பக்கத்தில் இருந்து நான் பார்த்தேன். போலிசாரிடம் கொடுத்த புகாரில் என்னுடைய இருசக்கர வாகனத்தின் எண் மற்றும் மாடல் போன்ற விபரங்களை எழுதிக் கொடுத்தார்.

இறந்து போன துளசிமணி சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் மதுபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவவிபரங்கள் எனக்கு ஏதும் நேரடியாக தெரியாதென்றால் சரியல்ல.

3. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது சுமார் 12.00 மணியிருக்கும். நான் அரசு மருத்துவமனையிலிருந்து எனது வீட்டிற்கு நான் வரவில்லை. முத்தையா காவல் நிலையத்தில் சரண்டரான விபரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் அ.சா.1 பச்சை நிற உடை அணிந்திருந்தார் என்றால் சரியல்ல, புளுகலர் நிற உடை அணிந்திருந்தார். என் பெயரில் கொலை முயற்சி வழக்கு ஒன்று உள்ளதென்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலிசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. என் பெயரிலுள்ள கொலை முயற்சி வழக்கில் விடுதலையாக வேண்டுமென்றால் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்க வேண்டுமென காவல் துறையினர் கேட்டுக் கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர் என் நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/–A.Saravanakumar
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.